இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,175, March 15, 1907.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation regarding Motor Traffic within Municipal Limits, Colombo.]

பெரிய பிரித்தானியாவின் ஐக்கிய இராச்சியத்துக்கும், ஐர்லந்து தேசத்துக்கும் சமுத்திரத்துக்கப்பாலுள்ள பிரித்தானியா இராச்சியங்களுக்கும் அரசரும் சமயபாதுகாவலருமாகிய மகத்துவம்பொருந்திய ஏழாவது எட்டுவேட் மன்னர் அவர்கள்பேரால்.

இலங்கைக்கும் அதற்குக் கீழ்ப்பட்ட தேசங்களுக்கும் தேசாதிபதியும், செனிஸ் மைக்கேல் ஜோர்ஜ் என்னும் அதிபிரசித்திபெற்ற ஓடரைச்சார்ந்த பட்டவர்த்தனரும் பிரபுவுமாகிய மாட்சிமைபொருந்திய சேர் என்றி ஆத்தர் பிளேக் அவர்களால் பிரசித்தம்செய்யப்படும்

## மகாவிக்கியாபனம்.

என்றி ஏ. பிளேக்,

1901 ம் ஆண்டின் 8 ம் இலக்கச் சட்டத்தில் 4 ம் பிரிவிலுலே நகரசங்கத்தார் 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்கச்சட்டத்தின் ஒழுங்குகளை நடத்துவதற்கு அவசியமானவையென்று அல்லது தகுதியானவையென்று காணும் துணைப்பிரமாணங்களை காலத்துக்குக்காலம் செய்யவும், செய்ததை அழிக்கவும், திருத்தவும், மாற்றவும், விகற்பிக்கவும், அவைகளை மறுத்து நடக்கும் குற்றங்களுக்கு 20 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கவும் கூடும் என்று திருபிக்கப்பட்டிருக்கிறது ; அதனுலும்,

மேற்சொன்ன 1901 ம் ஆண்டு 8 ம் இலக்கச்சட்டத்து 6 ம் பிரிவின் 1 ம் 2 ம் கீழ்ப் பிரிவுகளிலுலே எந்தத் துணைப்பிரமாணத்தையாவது அவைகளை நீக்குதலாவது, திருத்தலாவது, மாற்றுதலாவது, அல்லது விகற்பித்தலாவது மந்திராலோசனைச் சபையாருடைய யோசனையோடு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்படும்வரைக்கும் பெலனுடையவைகளாகா, அப்படி உறுதிப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்கள் அரசினருடைய "கசெற்" பத்திரிகையில இங்கிலீசு, தமிழ், சிங்களம் என்னும் முப்பாஷைகளிலும் இருமுறை அடுத்து பிரசுரஞ்செய்யப்பட்டு, அப்பொழுது நடைபெற்றுவரும் சட்டநிருபணச் சபையில் அப்பொழுது அச்சபை நடைபெறாவிட்டால், அதற்கு அடுத்தமுறை கூடும் சட்டநிருபணச் சபையில் வைக்கப்படும், அங்ஙனம் வைக்கப்பட்டு நாற்பது நாட்களுள் அச்சொல்லிய சட்டநிருபணச் சங்கத்தார் அத்துணைப்பிரமாணங்களை எதைக்குறித்தாவது ஆட்சேபனைசெய்து அவைகளைத் திருத்தி அல்லது மாற்றினுல் அப்படி அச்சொல்லிய சட்டநிருபணச் சங்கத்தாரால் திருத்தப்பட்ட துணைப்பிரமாணங்களும் திருத்தப்படாத அல்லது மாற்றப்படாத துணைப்பிரமாணங்களும் அரசாங்க "கசெற்" பத்திரிகையில் இங்கிலீசு, சிங்களம், தமிழ் என்னும் முப்பாஷைகளிலும் இருமுறை படுத்தும் பிரசித்தஞ்செய்யப்பட்டு பெலனுடையனவாய் குறித்த சட்டத்தில் விதிக்கப்பட்டபடி கட்டுப்பாடும் பெலப்பும் உடையனவாய் நியாயப்பிரமாணமெனக் கவனிக்கப்படும் என்று திருபிக்கப்பட்டிருக்கிறது ; அதனுலும்,

2. இவ்வாறே காணப்படும் துணைப்பிரமாணம் குறித்த 1901 ம் ஆண்டு 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தி முற்கூறிய 4 ம் பிரிவின்படி ஒழுங்குகளுக்கிணங்க கொழும்பு நகரசங்கத்தாரால் உண்டாக்கப்பட்டு 6 ம் பிரிவின்படி இவை மந்திராலோசனை சபையாரது யோசனையோடு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்டன. மேலும் 1906 ம் வருஷம் ஒக்டோபர்மாதம் 26 ந் தேதியிலும், நவம்பர்மாதம் 2 ந் தேதியிலும் அரசாங்க "கசெற்" பத்திரிகையில் இங்கிலீசு, சிங்களம், தமிழ் என்னும் முப்பாஷைகளிலும் அடுத்து இருமுறை பிரசித்தஞ்செய்யப்பட்டு அப்பொழுது நடைபெற்றுவந்த சட்டநிருபணச்சபையில் வைக்கப்பட்டன ; அதனுலும்,

இவ்வாறு சட்டநிருபணச்சபையில் வைக்கப்பட்டபின் நாற்பது நாட்களுள் குறித்த துணைப்பிரமாணங்களை அச்சட்டநிருபணச்சபையார் திருத்தவும் இல்லை, அழிக்கவுமில்லை; அதனுலும்,

இப்பொழுது கீழே காணப்படும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் துணைப்பிரமாணம் தேசாதிபதியாகிய யாம் மேற்சொல்லிய நமக்குக் கிடைத்த தத்துவத்தைச் செலுத்தி பிரசித்தஞ்செய்வதை யாவரும் அறிந்துகொள்ளக்கடவது.

இலங்கைத்தீவில் எங்கள் கர்த்தருடைய 1907 ம் வருஷம் மார்ச்சு 6 ந் தேதி கொழும்பில் கொடுக்கப்பட்டது.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,

ஜீ. எம். பவுலர்,
அக்டிங் கலோனியல் சக்கிரெத்தார்.

---

### உபசட்டமாவது.

" அரசாங்க "கசெற்" பத்திரிகையிலாவது அல்லது அக்கிராசனர் தீர்மானஞ்செய்யும் தினப் பத்திரிகைகளிலாவது காலத்துக்குக் காலம் நகரசங்கம் அறிவித்தல் கொடுத்து, நகரசங்க எல்லைக்குள்பட்ட எந்த வீதிகளிலாவது முற்றும் அல்லது நகரசங்கத்தார் அவசியமென்று கண்டு குறிக்கும் காலம்வரைக்கும் மோட்டர் வண்டிகள் பிரயாணஞ் செய்யாதபடி தடுக்கலாம், அப்படித் தடுக்கப்பட்டபின் குறிக்கப்பட்ட எந்த வீதியிலாவது காலத்திலாவது மோட்டர் இரதம் மோட்டர் லோரி அல்லது மோட்டர் சைக்கில் என்னும் வண்டிகளைச் செலுத்தும் எவரும் குற்றத்துக்காளாகி இருபது ரூபாவுக்கு மேற்படாத அபராதம் விதிக்கவேண்டியவராவார்.'

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

No. 1,103, E. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்
கொழும்பில், 1907 ம் ௵ பெப்ருவரி 1 ந் ௳.

1907 ம் ஆண்டு சித்திரைமாதம் 23 ந் தேதியாகிய செவ்வாய்க்கிழமை முற்பகல் கிழக்கு மாகாணத்து கவன்மேந்து ஏசென்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்பார்.

காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 3,657. மண்முனைப்பற்று.

உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | பே. | தீர்ப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 93163 | பெரியதுறை | வீ. காத்தாரும் பின்னொருவரும் | காட்டுப்பூமி | 0 | 2 | 38 | 20 |
| | | படம் 3,659. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 93165 | ஷை. | க. பெரியான் | காடும் பறட்டைக் காடும் | 1 | 0 | 34 | 20 |
| | | படம் 3,357. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 90427 | பித்தியங்குடா | ஆ. மீராசாய்பு | காட்டுப்பூமி | 3 | 0 | 34 | 15 |
| | | படம் 3,049. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 88056 | விளாவட்டவான் | மு. காத்தமுத்து | தோட்டப்பூமி | 2 | 2 | 18 | 15 |
| 88057 | ஷை. | ஷை. | ஷை. | 1 | 0 | 4 | 15 |
| | | படம் 3,209. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 88896 | கொத்தியாபுலை | நா. சின்னத்தம்பி | வயல் | 1 | 3 | 2 | 15 |
| | | உரித்தாளி—கட்டிப்பிடித்தது. | | | | | |
| 88897 | ஷை. | க. இவுருபீம் | வயல் | 0 | 2 | 29 | 15 |
| 88898 | ஷை. | ஷை. | வயல் | 0 | 0 | 33 | 15 |
| | | படம் 3,225. உரித்தாளி—கட்டிப்பிடித்தது. | | | | | |
| 88971 | குரிஞ்சாமுனை | வீ. அமுகத்தாப்போடி | வயல் | 1 | 1 | 26 | 15 |
| | | படம் 3,446. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 92123 | வலையிறவு | பொதுவிற்பனவு | வேளாண்மைச்சேற்ற காடு | 3 | 1 | 17 | 15 |
| 92125 | ஷை. | ஷை. | ஷை. | 1 | 0 | 18 | 15 |
| | | படம் 3,620. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 92820 | மருங்கையடிவட்டை | சி. உமறுகத்தா | வயல் | 7 | 2 | 0 | 15 |
| | | உரித்தாளி—கட்டிப்பிடித்தது. | | | | | |
| 92821 | ஷை. | சி. உமறுகத்தா | வயல் | 0 | 1 | 5 | 15 |
| 92822 | ஷை. | க. செம்பாப்போடி | வயல் | 4 | 0 | 0 | 15 |
| 92823 | ஷை. | ஷை. | வயல் | 5 | 2 | 0 | 15 |
| 92824 | ஷை. | ஷை. | வயல் | 2 | 1 | 25 | 15 |
| 92825 | ஷை. | ஷை. | வயல் | 0 | 0 | 18 | 15 |
| | | படம் 3,605. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 92746 | ஈலுவில்லு | உ. க. அசனார் | வயல் | 1 | 2 | 3 | 15 |
| 92747 | ஷை. | கா. வைரன் | வயல் | 7 | 2 | 20 | 15 |
| | | உரித்தாளி—கட்டிப்பிடித்தது. | | | | | |
| 92748 | ஷை. | கா. வைரன் | தென்னந்தோட்டம் | 0 | 0 | 2 | 15 |
| 92749 | ஷை. | ஷை. | ஷை. | 0 | 0 | 3 | 15 |
| 92750 | ஷை. | ஷை. | ஷை. | 0 | 0 | 4 | 15 |
| | | படம் 3,641. கோறளைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 93120 | கிழக்குப்பனச்சேனை அல்லது அத்தியவட்டவான் | அ. ஆதம்வாவா | துப்பரவுபண்ணிய பூமி | 0 | 3 | 34 | 15 |
| | | உரித்தாளி—கட்டிப்பிடித்தது. | | | | | |
| 93124 | ஷை. | உ. அகமதுலெவ்வை | வயல் | 0 | 1 | 38 | 15 |
| 93125 | ஷை. | ஷை. | வயல் | 0 | 0 | 26 | 15 |
| 93128 | ஷை. | பொ. அகமதுலெவ்வை | வயல் | 0 | 3 | 15 | 15 |
| | | படம் 3,645. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 93140 | கதிரவெளி | ப. செல்லப்பா | காட்டுப்பூமி | 4 | 0 | 26 | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசென்றத்துரையவர்களிடம் வினவி அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்கள் கட்டளைப்படி,

ஜீ. எம். பவ்வர்,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Slave Island, Colombo District.]

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 12,976. கொம்பனித்தெரு.

1907 ம் ஆு சித்திரைமீ 22 ந் தேதி.

| துண்டு. | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | அ. | பே. |
|---|---|---|---|---|---|
| | | சேட்யாட்லேன். | | | |
| D 856 | வேயப்பட்டிருக்கும் வீடும் இன்னும் சில | பி. எச். பகார் | 0 | 0 | 4·40 |
| | | கிபூறேட். | | | |
| E 856 | மூன்அறிரை கட்டடங்களும் ஒரு கடையும் | கா ஸ். மம்மது | 0 | 0 | 38·50 |
| | | சேட்யாட்லேன். | | | |
| F 856 | ஒரு தொகை கட்டடங்கள் | எஸ். எம். யோகார் | 0 | 0 | 10·75 |
| G 856 | துண்டுகாணியும் தென்னமரங்களும் | கௌரவ எஸ். கி. ஒபயசேகர, எஸ். எம். போகரால் தொடரப்பட்டன | 0 | 0 | 0·62 |
| H 856 | ஒரு தொகையான வீடுகளும் இன்னும் சில | கௌரவ எஸ். கி. ஒபயசேகர | 0 | 0 | 9·75 |
| I 856 | ஒரு கட்டடத்தின் பகுதி | அமலன் அபின் சாய்பு | 0 | 0 | 0·13 |
| J 856 | ஒரு தொகையான வீடுகள் முதலியன | கைதர் பிபி | 0 | 0 | 10·75 |
| K 856 | டிை. | அசன் தம்பி | 0 | 0 | 14·25 |
| L 856 | டிை. | அப்துல்அசீஸ் | 0 | 0 | 5·75 |
| M 856 | டிை. | செனு பீ | 0 | 0 | 8 |
| | 1907 ம் ஆு சித்திரைமீ 23 ந் தேதி. | | | | |
| N 856 | இரண்டு திரை கட்டடங்களும் இன்னும் சில | சேகராச மயீன் | 0 | 0 | 10·25 |
| O 856 | ஒரு கட்டடத்தின்பக்கம் | டிை. | 0 | 0 | 0·12 |
| | | கிபூ பாசேச். | | | |
| P 856 | ஒரு கட்டடத்தின் பகுதி | சேகராச மயீன் | 0 | 0 | 0·50 |
| | | சேட்யாட் லேன். | | | |
| Q 856 | ஒரு தொகையான கட்டடங்களும் இன்னும் சில | கபிபுதின் காத்துமன் | 0 | 0 | 2·75 |
| R 856 | வேயப்பட்டவீடு | என். ச. எம். பக்கீர் | 0 | 0 | 1·12 |
| S 856 | டிை. | றெபீமா அனிவ்பேல் | 0 | 0 | 3·62 |
| T 856 | இரண்டு திரைவீடுகளும் மற்றவையும் | என். ச. எம். பக்கீர் | 0 | 0 | 11·45 |
| U 856 | வேயப்பட்ட வீடும் தோட்டமும் | அகமதின் சோபதின் | 0 | 0 | 5 |
| V 856 | வேயப்பட்ட வீடு முதலியன | சமலதுன் போறன் | 0 | 0 | 6 |
| W 856 | டிை. | ஏ. ஆர். அச்மாயீன் | 0 | 0 | 7 |
| | 1907 ம் ஆு சித்திரைமீ 24 ந் உ. | | | | |
| X 856 | டிை. | சீன் கறீம் | 0 | 0 | 14 50 |
| Y 856 | இரண்டு தொகையான கட்டடங்கள் | இசா உம்மா | 0 | 0 | 13·75 |
| Z 856 | தொகையான கட்டடங்கள் | எம். எல். வான்ஸ | 0 | 0 | 10·75 |
| | | சேட்யாட் லேன். | | | |
| A 857 | முற்தோட்டத்தின் ஒரு பகுதி | சிற்சிலாறு | 0 | 0 | 0·25 |
| B 857 | எல்லை சுவரின் ஒரு பகுதி | ஜோன். ச. டீ. சில்வா | 0 | 0 | 0·05 |
| C 857 | வெளிதுண்டு | ஐ. டங் மரகார் | 0 | 0 | 0·37 |
| | | கிபூ றேட். | | | |
| D 857 | மூன்று தொகையான கட்டடங்கள் | ஜே. எச். அகவியா | 0 | 0 | 16·25 |
| E 857 | டிை. | சய அம்சா | 0 | 0 | 15·75 |
| F 857 | வேய்ந்த ஒரு வீட்டின் பகுதி | எம். கி. காறீம் | 0 | 0 | 0·56 |
| | | சேட்யாட் லேன். | | | |
| G 857 | ஒரு தொகை கட்டடத்தின் பகுதி | பீ. சோச் வெல்ஸ் | 0 | 0 | 0·50 |
| H 857 | டிை. | றூமன்கத்தோலிக்க சேச் | 0 | 0 | 0·75 |
| | | கிபூ றேட். | | | |
| I 857 | இரண்டு தொகையான கட்டடத்தின் பங்கு | தெயிஷுமரகாயர் | 0 | 0 | 24·37 |
| J 857 | ஒரு கட்டடம் | பீற்றர் பொன்சேகா | 0 | 0 | 13 |
| K 857 | டிை. | மிஸ்றர் தோமஸ் றன்லப் | 0 | 0 | 14·37 |
| L 857 | டிை. | உவில்லியம் ஏ. பீறின் | 0 | 0 | 3·25 |
| | | | 1 | 2 | 39·18 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் உற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ௵ முன்சொல்லப்பட்ட தேதிகளில் 1 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1907 ம் ௵ பங்குனியீ 13 ந் தேதி.

சி. டி. வைகர்ஸ்,
அரசாட்சி ஏசன்டு.

---

[Talatu oya, Kandy District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு பள்ளிக்கூடம் கட்டுதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அக்தாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,645. குறிச்சி—தலாத்துஓயா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| R 894 | ஏகற்றுகாகதென்னே | ஊர்த்தோட்டம் | ஒ. ல. ம. மகுகாஸிம் மரக்காயர் | 0 3 14 |
| S 894 | அஸ்வேடுமேகெடிறஉம்பறவத்தை | டிை. | அசுங்கமவியனகே டொன் அன்டிறிஸ் அப்பு | 0 0 7 |
| T 894 | டிை. | டிை. | வீரசூரியவிஜசுண்டரறுஜபக்சபகாலமுதியான்சலாகே உக்குபண்டா | 0 0 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிதெப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1907 ம் ௵ சித்திரைமாசம் 17 ந் தேதியிலன்று 1 மணிக்கு கண்டி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டு தந்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டி கச்சேரி,
1907 ம் ௵ பங்குனியீ 12 ந் உ.

ஜே. பி. லுவிஸ்,
மத்தியமாகாண அரசாட்சி ஏசன்டு.

---

[Ambagamuwa, Kandy District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்லுடைக்கிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அக்தாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,672. குறிச்சி—அம்பகமுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| 15021 | கின்னரில் தோட்டம் | தேயிலை வெறுந்தரை | கின்னரில்தோட்டம் | 0 1 4 |
| 15022 | டிை. | வெறுந்தரை | டிை. | 0 0 20 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிதெப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ௵ சித்திரையீ 17 ந் தேதியிலன்று 1 மணிக்கு கண்டி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டி கச்சேரி,
1907 ம் ௵ பங்குனியீ 12 ந் உ.

ஜே. பி. லுவிஸ்,
மத்தியமாகாண அரசாட்சி ஏசன்டு.

---

[Yatiyantota, Kegalle District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யட்டியான்தொட்டையில் ஆடுமாடு முதலானவை கொன்று இறைச்சிக்கடைக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அக்தாவது :—

பிரதமபடத்து இலக்கம் 1,489. குறிச்சி—யட்டியான்தொட்டை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| S 168 | தெகத்திகேவத்தை | மாடடிக்கிறவீடும் தோட்டமும் | யோன்பின்ன பலயதுராச்சி | 0 0 7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிதெப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ௵ சித்திரைமாதம் 26 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு கேகாலை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1907 ம் ௵ பங்குனியீ 12 ந் தேதி.

எச். ஸ்டிவன்சன்,
அரசாட்சி உதவி ஏசன்டு.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரங்கள்.

[Anuradhapura S. O. 23—1907.]

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1907 ம் ஆடு மார்ச் (பங்குனி)மீ 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யூ. ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்விய விசேஷ உத்தியோகத்தர் சொல்விய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்விய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யூ. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கூட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை கெத்தேகோறளை பகலவெவுதுளானையைச்சேர்ந்த தியுல்வெவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனனைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 456.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | அ. | பே. |
|---|---|---|---|---|
| 1 | தியுல்வெவகேன்யாய | 29 | 3 | 31 |
| 2 | குடாவெவமூக்கலானை | 33 | 3 | 37 |
| 3 | தியுல்வெவமூக்கலானை, கின்னமூக்கலானை, தியுல்வெவகட்டுவ | 302 | 2 | 15 |
| 3*d* | தியுல்வெவமூக்கலானை | 2 | 1 | 30 |
| 3*e* | ஷை | 3 | 0 | 0 |
| 5 | கிரிஅலகல்லேகேன்யாய | 88 | 3 | 10 |
| 6 | கிரிஅலகலேமூக்கலானை | 113 | 0 | 5 |
| 7 | கமகாவகேனை | 5 | 3 | 5 |
| 8*a* | தியுல்வெவபஸ்யம்ப | 0 | 0 | 2 |
| 8*b* | ஷை | 0 | 0 | 6 |
| 8*c* | தியுல்வெவதிஸ்யம்ப | 0 | 1 | 32 |
| 10*a* | பாலுகம்மெத்த | 0 | 1 | 36 |
| 11 | பாலுகாகேனை | 5 | 2 | 38 |
| 12 | துககாகேனை | 2 | 3 | 29 |
| | | 589 | 0 | 36 |

எல்லைகளாவன :—வடக்கு-பெல்லங்கடவலக் கிராம எல்லை ; கிழக்கு-புல்லேலவியக் கிராம எல்லை ; தெற்கு-கவாவெல்பொத்தானைக் கிராம எல்லை ; மேற்கு-மின்கெற்றிகமக் கிராம எல்லை, தில்லங்கலக் கிராம எல்லை.

கவனிப்பு :—மேற்சொல்விய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள், இவ்வறிவித்தலினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 148 ஏக்கர் 3 றூட்டு 25 பேட்சும் முன்குறித்த 589 ஏக்கர் 36 பேட்சுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதம படம் 456.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | அ. | பே. |
|---|---|---|---|---|
| 3*a* | தியுல்வெவஹீனிபிற்றனிய | 0 | 2 | 3 |
| 3*b* | தியுல்வெவகம்மெத்த | 0 | 0 | 12 |
| 3*c* | ஷை | 0 | 1 | 25 |
| 3*f* | தியுல்வெவமூக்கலானை | 56 | 1 | 25 |
| 4 | தியுல்வெவ | 66 | 3 | 15 |
| 8 | தியுல்வெவகம்மெத்த | 3 | 0 | 28 |
| 9 | தியுல்வெவவெல | 18 | 0 | 29 |
| 10 | பாலுகம்மெத்த | 3 | 1 | 8 |
| | | 148 | 3 | 25 |

*இங்கிலீசின் IV. ம் பாகம் 235 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,681

---

[Anuradhapura S. O. 24—1907.]

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1907 ம் ஆண்டு மார்ச் (பங்குனி)மீ 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்புமுகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரியாவிடில், சொல்விய விசேஷ உத்தியோகத்தர் சொல்விய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்விய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

### சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகலாவியத்தை உலக்கல்லகோறளை நாச்சாதுவாவையைச்சேர்ந்த வெல்லமுடாவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 401.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | விசாலம். ஏ. | அ. | பே. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ... | பளுகாமூக்கலாவே | ... | ... | ... | 184 | 2 | 8 |
| 1b | ... | ஷெ | ... | ... | ... | 1 | 3 | 16 |
| 1c | ... | ஷெ | ... | ... | ... | 38 | 3 | 32 |
| 1d | ... | ஷெ | ... | ... | ... | 3 | 2 | 32 |
| 2 | ... | வன்னூங்கலகேவே | ... | ... | ... | 164 | 3 | 24 |
| 2b | ... | வன்னூங்கல | ... | ... | ... | 1 | 1 | 38 |
| 2d | ... | வன்னூங்கலகேவே | ... | ... | ... | 30 | 2 | 31 |
| 2e | ... | ஷெ | ... | ... | ... | 5 | 3 | 28 |
| 2f | ... | ஷெ | ... | ... | ... | 1 | 0 | 0 |
| 4 | ... | வெலிகலகேவே | ... | ... | ... | 93 | 1 | 27 |
| 4b | ... | ஷெ | ... | ... | ... | 33 | 2 | 20 |
| 4c | ... | ஷெ | ... | ... | ... | 5 | 2 | 0 |
| 6 | ... | வெல்லமுடாவதிஸ்பம்ப | ... | ... | ... | 2 | 0 | 11 |
| 6a | ... | ஷெ | ... | ... | ... | 0 | 1 | 11 |
| | | | | | | 567 | 3 | 38 |

எல்லைகளாவன : வடக்கு-கம்மில்லகுளக் கிராம எல்லை, வீரப்புடிக்குளக் கிராம எல்லை ; கிழக்கு-குஞ்சிக்குளக் கிராம எல்லை ; தெற்கு-குடாகமக் கிராம எல்லை, வகையாகுளக் கிராம எல்லை ; மேற்கு-குட்டிக்குளக் கிராம எல்லை, மில்லகாவெலக்கிராம எல்லை, செல்லத்துமவேக் கிராம எல்லை, கம்மில்லகுளக் கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலினின்று நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அவைகளின் விசாலத் தொகையாகும் 180 ஏக்கர் 1 றூட் 23 பேட்சும் முன்சொன்ன 567 ஏக்கர் 3 றூட் 38 பேட்சுக்குள் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 401.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | விசாலம். ஏ. | அ. | பே. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1a | ... | பளுகாமூக்கலாவே | ... | ... | ... | 0 | 2 | 4 |
| 2a | ... | நுககாயாய (உ. ப. 217,696) | | ... | ... | 0 | 2 | 14 |
| 2c | ... | வன்னூங்கலகேவே | ... | ... | ... | 67 | 3 | 2 |
| 3 | ... | வெல்லமுடாவேவெல (பி. ப. 206/W 58, X 58, Y 58, Z 58, A 59 லிலிருந்து J 59 வரையும்) | | ... | ... | 25 | 1 | 26 |
| 3a | ... | ஷெ | ... | ... | ... | 0 | 0 | 1 |
| 4a | ... | வெலிகலகேவே | ... | ... | ... | 31 | 1 | 11 |
| 5 | ... | வெல்லமுடாவேவெல | ... | ... | ... | 53 | 1 | 38 |
| 7 | ... | கம்மெத்த | ... | ... | ... | 1 | 1 | 7 |
| | | | | | | 180 | 1 | 23 |

* இங்கிலிஷின் IV. ம் பாகம் 238 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

82

---

[Chilaw S. O. 1—1907.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1907 ம் ஆ மார்ச் (பங்குனி) மீ 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. ஜி. பெரேரா துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜி. பெரேரா,
விசேஷ உத்தியோகத்தர்.

---

### சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் சிலாப டிஸ்திரிக்கு மத்தியபிற்றிகல்கோறளையில் யாகம்பத்தைச்சேர்ந்த அருக்குமுல்ல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 242.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம் ஏ. | அ. | பே. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ... | பொத்துவிலகேட்டுவ அல்லது அருக்குமுல்லகேன்யாய | | ... | 136 | 0 | 20 |
| 1b | ... | அருக்குமுல்லகேன்யாய (பிரதம படம் 3,030/13,516) | | ... | 0 | 1 | 26 |
| 1c | ... | அருக்குமுல்லகேன்யாய (பிரதம படம் 3,030/13,520) | | ... | 0 | 1 | 20 |
| 10 | ... | அருக்குமுல்லவெவ | ... | ... | 7 | 3 | 12 |
| | | | | | 144 | 2 | 38 |

எல்லைகளாவன ; வடக்கு-யோதஎல என்னும் நீரோடை, முனீச்சுரப்பத்திவெல்ல ; கிழக்கு-விலத்தவக் கிராம எல்லை ; தெற்கு-232,049 ம், 232,048 ம், 232,047 ம் உரிமைப்படங்களில் கண்டிருக்கும் காணிகள், விஜெயசிங்க கெந்தியாச்சி முதியன்செலாகே முதவிகாமி வெலவிதானே உரித்துப்பேசும் கும்புக்காகும்புற, 232,047 ம் உரிமைப்படத்தில்

* இங்கிலிஷின் IV. ம் பாகம் 240, 241 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

கண்டிருக்கும் காணி ; மேற்கு-விஜெயசிங்க கெற்றியாச்சி முதியான்செலாகே முதலிகாமி வெல்விதானே உரித்துப்பேசும் கும்புக்காரும்புற, மஞ்சநாயக முதியான்செலாகே புஞ்சிறுலா அப்புகாமி உரித்துப்பேசும் தல்காரும்புற, விஜெயசிங்க கெற்றியாச்சி முதியான்செலாகே முதலிகாமி வெல்விதானே உரித்துப்பேசும் கொகோம்பகாரும்புற, மஞ்சநாயக முதியான்செலாகே புஞ்சிறுலா அப்புகாமி வெல்விதானே உரித்துப்பேசும் பகலகோங்காரும்புற, அல்லது கோங்காரும்புற, யோதஎல என்னும் நீரோடை, மஞ்சநாயக முதியான்செலாகே புஞ்சிறுலா அப்புகாமி வெல்விதானே உரித்துப்பேசும் பகலகோங்காரும்புற அல்லது கோங்காரும்புற, கொக்காவிலக் கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்கும் காணித்துண்டு இவ்வறிவித்தலினின்றும் நீக்கப்பட்டிருக்கின்ற தென்பதையும், அதின் விசாலமாகும் 1 ஏக்கர் 3 றூட்டு 37 பேர்ச்சும் முன்சொன்ன 144 ஏக்கர் 2 றூட்டு 38 பேர்ச்சுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 242.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|---|
| 9 | ... | திம்பிரிகாவில அல்லது பொத்துவில | ... | ... | 1 3 37 |

II.

பிரதம படம் 242.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|---|
| 7 | ... | தலகாகட்டுவெகெலே கோங்காகேலே | ... | ... | 9 3 27 |
| 8 | ... | இஸ்வெற்றியமூக்கலானே அல்லது தலகாகட்டுவெமூக்கலானே | | | 12 0 15 |
| | | | | | 22 0 2 |

எல்லைகளாவன : வடக்கு-ஓர் அடிப்பாதை, விஜெயசிங்க கெற்றியாச்சி முதியான்செலாகே முதலிகாமி வெல்விதானே உரித்துப்பேசும் காட்டகாகேலே, விஜெயசிங்க கெற்றியாச்சி முதியான்செலாகே கிரிவண்டாவும் மறுபேரும் உரித்துப்பேசும் அம்பகாவத்தை, விஜெயசிங்க கெற்றியாச்சி முதியான்சேலாகே கிரிவண்டா உரித்துப்பேசும் மாறகாவத்தை, விஜெயசிங்க கெற்றியாச்சி முதியான்செலாகே முதலிகாமி வெல்விதானே உரித்துப்பேசும் தல்காவத்தை, மேற்படியார் உரித்துப்பேசும் தங்காரும்புற ; கிழக்கு-விஜெயசிங்க கெற்றியாச்சி முதியான்செலாகே முதலிகாமி வெல்விதானே உரித்துப்பேசும் கும்புக்காரும்புற ; தெற்கு-புளியங்கடவரக் கிராம எல்லை ; மேற்கு-கொக்காவிலக் கிராம எல்லை.

2,683

---

[Kiripitiya, Matara District.]

இதன்பின் சொல்லப்படும் காணிக்கு எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1907 ம் ஆு பங்குனிமீ 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்துக்குள் மாத்தறை உதவி அரசாட்சி ஏஜண்ட் அவர்கள் முகதாவில் மாத்தறை கச்சேரியில் தெரிபட்டு தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையை தெரிவியாவிடில் சொல்லிய உதவி அரசாட்சி ஏஜன்று அவர்கள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள வெண்நிலச் சட்டங்களால் தமக்குண்டாகிய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணியை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவாரென்பதை அறிந்துகொள்க.

மாத்துறை கச்சேரி,
1907 ம் ஆு பெப்ரவரிமீ 25 ந் உ.

ஜீ. உக்லஸ்,
அரசாட்சி உதவி ஏஜன்று.

காணியின் விபரம்.

தென்மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கு மொறவக்கோறளையைச்சேர்ந்த கிரிபிட்டிய என்னும் கிராமத்தில் இத்துடனிணைத்திருக்கும்* உறுதிப்படத்தில் காணும் 1 றூட் 26 பேர்சஸ் விசாலமுள்ள சாதாரணமாய் ஹெதிகம்பன இஹலகெல்ல யென்று சொல்லப்படும் 3 ம் நிம்பர் உறுதிப்படத்தில் காணும் A5 காணித்துண்டின் எல்லைகளாவன :—வடக்கு-கொட்டஆராச்சிகே நிக்குலஸ் உரித்துப்பேசும் பொக்கேவத்த; கிழக்கு-வித்தாறனகே அதிரியன் உரித்துப்பேசும் தெல்கஹவத்தையும், ஏகொட ஆராச்சிகே நிக்குலஸ் உரித்துப்பேசும் கெடிகம்பொலவத்த ; மேற்கும் தெற்கும்-வித்தாரனகே அதிரியனும் மற்றும் பெயர்களும் உரித்துப்பேசும் ஹெடிகம்பொளடெனிய.

* இங்கிலீசின் IV. பாகம் 242 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,684

---

[Houpe, Matara District.]

இதன்கீழ் சொல்லப்படும் காணிக்கு எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1907 ம் ஆு மார்ச்மாசம் 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், மாத்துறை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்கள் முகதாவில் மாத்துறை கச்சேரியில் முகமுகமாய் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய உதவி அரசாட்சி ஏஜன்று அவர்கள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள வெண்நிலச்சட்டங்களால் தமக்கு உண்டாகிய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணியை அல்லது அதில் உரித்துப்பேசப்படாதவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

மாத்துறை கச்கேரி,
1907 ம் ஆு பெப்ருவரிமீ 25 ந் உ.

ஜீ. உக்லஸ்,
அரசாட்சி உதவி ஏஜண்டர்.

சொல்லிய காணியின் விவரம்.

தென்மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கு கங்கபோடபத்துவைவலைச்சேர்ந்த ஹவ்பே யென்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, 2 ஏக்கரும் 2 றூட்டும் 14 பேர்ச்சும் விசாலமுள்ள சாதாரணமாய் ஹிங்கா கமயாஹேன யெனக் கூறப்படும் 73 ம் படத்தில் 4 ம் நொம்பர் காணித்துண்டின் எல்லைகளாவன:—வடக்கு-ஸமாஸிங்கவவுன் அல்லது டொன் அந்திரிஸ் உரித்தாடும் கல்கெட்டியேகொடதெனிய; கிழக்கு-மாறம்பபன்ஸலே ஓபாட்ட உன்னான்சே உரித்தாடும் கனேகொறட்டுவ அல்லது பன்சலவத்தை ; தெற்கு-நதாவெலகேவவுனும் இன்னுஞ் சிலரும் உரித்துப்பேசும் டெவெல்ஹேநேவத்தயும் கொஸ்கஹகொறட்டுவ, ஹவ்பேகமகே டொன் அந்திரிசும் மற்றும் பெயர்களும் உரித்தாடும் ஹித்தறன்ககொறட்டுவ ; மேற்கு-சமரஸிங்க வவுன் அல்லது டொன் அந்திரிசும் மற்றும் பெயர்களும் உரித்துப்பேசும் கல்கெட்டியேகொட, தாவுதுமறைக்காரும் மற்றவர்களும் உரிமைபேசும் புவககாகனட்டிய, ஹெனிமெவியனகே டொன் டாவிட்டும் மற்றவர்களும் உரித்துப்பேசும் ஏவியசேரும்புர.

* இங்கிலீசின் IV. ம் பாகம் 243 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,685

[Houpe, Matara District.]

இதன்கீழ் சொல்லப்பட்டிருக்கிற காணிக்கு உரித்துடையவ ரெவராகிலுமிருந்தால், அவர்கள், 1907 ம் ஆண்டு மார்ச் மாசம் 15 ந் தேதி முதல் மூன்று மாசத்திற்குள் இதின்கீழ் காணிக்கு அல்லது அதிலொரு பகுதிக்கு உரித்துடையவரிருக்கிறதென்று சொல்லுகிற யாருமிருந்தால், அப்படிப்பட்டவர்கள் மாத்துறை கச்சேரியில் மாத்துறை டிஸ்திரிக்கு உதவி ஏஜன்றுதுரை முகதாவில் தெரியப்படுத்தி சொல்லிய காணிக்கு அல்லது அதில் பிரதேசத்துக்கு இருக்கும் உரித்தை காண்பிக்காவிட்டால், மேற்சொல்லிய உதவி ஏஜன்றுதுரை அவர்கட்கு வெண்காணிக்கட்டளைப்படி 1897, 1899, 1900, 1903 ம் ஆண்டுகளில் ஞாயச்சட்டங்களால் கொடுத்திருக்கும் அதிகாரத்தின்படி உரித்துச்சொல்லாமல்விட்ட குறித்த காணிகளை அரசாட்சியாரின் காணிகளென்று அவர்களின் கையொப்பமுள்ள எழுத்துமுறையால் அவர்களால் அறியக்கொடுக்கிறதை இதனாலறிந்துகொள்ளவேண்டியது.

ஜி. குக்ஸன்,
அரசாட்சி உதவி யேஜன்றவர்கள்.

மாத்துறைக் கச்சேரி,
1907 ம் ஆண்டு பெப்ரவரி 25 ந் உ.

கட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திரிக்கு கங்பொடபத்துவைச்சேர்ந்த ஹவுப்பே யென்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதிகளில் விபரித்தபடியே, குறிக்கப்படும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 73.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 22 ... | கங்வொடஹேன ... ... ... | 1 1 36 |

எல்லைகளாவன : வடக்கு-அரசாட்சியாரின் காணிகளாக பிரசித்திருக்கும் கொடமுல்லேஹேனேயும் பன்னேஅதுமுல்லேஹேனேயும், (காணித்துண்டு 21) அல்லது ஹினிதுவவியனக்க தாவித்தும் மற்றும் பெயர்களும் உரித்துப்பேசுகின்ற கிருந்தேகேவத்தை ; கிழக்குக்கு-கந்தண்ட ஆருச்சிகே அபேநாயக்க புஞ்ஜிஅப்புக்கு அரசாட்சியாரால் விற்கப்பட்ட கங்வொடஹேன, (காணித்துண்டு W. L. O. S. 69) ; தெற்கு-அரசாட்சியாரால் முகம்மது இவுருமே மீதின் கண்டுக்கு விற்ற வெளமகேவில, (உறுதிப்படம் 111,533) ; மேற்கு-அரசாட்சிக்குடையதென பிரசித்தம்பண்ணியிருக்கும் கொடவிலஹேனேயும், பன்னேஹமுல்லேஹேனேயும்.

II.

பிரதம படம் 73.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 22b ... | கங்வொடஹேன ... ... ... | 0 1 16 |

எல்லைகளாவன : வடக்கு-கந்தண்ட ஆருச்சிகே அபேநாயக்க புஞ்ஜிஅப்புவுக்கு அரசாட்சியாரால் விற்கப்பட்ட கங்வொடஹேன, (W. L. O. S. 69) ; கிழக்கு-மீராக்கண்டு சருப் அவர்களின் ஆதுமுக்கென்று உரித்துப்பேசும் மொறியிகேவில் ; தெற்கு-கண்ஹூராவா குறிச்சியின் கிராம எல்லையும் அரசாட்சிக்குடையதென்று பிரசித்தப்பண்ணப்பட்டிருக்கும் உம்மகாவாஹேன ; மேற்கு-அரசாட்சியாரால் முகம்மது இவுருமே மீதின்கண்டுக்கு விற்கப்பட்ட வெளமகேவில, (உறுதிப்படம் 111,533).

III.

பிரதம படம் 73.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| W. L. O. S. 69/A ... | கிரிந்தகேவத்த ... ... ... | 0 2 25 |

எல்லைகளாவன : வடக்கு-237,586 ம் உறுதிப்படத்தில் காணும் கங்வொடஹேன ; கிழக்கு-கந்தண்ட ஆராச்சிகே அபேநாயக்க புஞ்ஜிஅப்புக்கு அரசாட்சியாரால் விற்கப்பட்ட கங்வொடஹேனே (W. L. O. S. 69/A) ; தெற்கு-கந்தண்ட ஆராச்சிகே அபேநாயக்க புஞ்ஜிஅப்புக்கு அரசாட்சியாரால் விற்கப்பட்ட கங்வொடஹேனே, (W. L. O. S. 69/A) ; மேற்கு-அரசாட்சிக்குடையதென்று பிரசித்தம்பண்ணப்பட்டிருக்கும் கொடவிலஹேனேயும், பன்னேஹத்துமுல்லேஹேனேயும், (காணித்துண்டு 21.)

* இங்கிலீஷின் IV. ம் பாகம் 244, 245 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க

2,686

---

[Morawaka, Matara District.]

இதின்கீழ் சொல்லப்பட்டிருக்குகிற காணிக்கு எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1907 ம் ஆண்டு மார்ச் 15 தேதி முதல் மூன்று மாசத்திற்குள் மாத்துறை உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடம் மாத்துறைக் கச்சேரியில் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைக் காண்பிக்காவிட்டால், சொல்லிய உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்கள் 1897 முதல் 1903 ம் ஆண்டுவரையுள்ள வெண்ணிலச் சட்டங்களால் தமக்கு உண்டாகிய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணியை அல்லது அதில் உரித்துப்பேசப்படாதவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜி. குக்ஸன்,
உதவி அரசாட்சி ஏஜண்ட்.

மாத்துறை கச்சேரி,
1907 ம் ஆ பெப்ரவாரிமீ 28 ந் தேதி.

சொல்லிய காணியின் விவரம்.

தென்மாகாணம் மாத்துறை டிஸ்திரிக்கு மொறவக்கோறளையைச்சேர்ந்த மொறவக்க யென்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்கும் காணித்துண்டு :—

பிரதம படம் 40.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே |
|---|---|---|
| 113 ... | தாவெல ... ... ... | 3 2 22 |

* இங்கிலீஷின் IV. ம் பாகம் 246 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

எல்லைகளாவன: வடக்கு-ஐயசிங்க விதானகே பொந்திரிஸ் உரித்தாமெனும் முத்தய்ஞகண்டகும்புறமும், வெலகாவாஹேனை, முடிக்குரிய அதனைமெனப் பிரசித்தப்படுத்தியிருக்கும் பெக்கு வனஹேனை, தெற்கு-வெலகொடஹேனை, முடிக்குரிய பெக்கு வனஹேனை, விதானகே சிஞ்ஞோஅப்பு உரித்துப்பேசும் ஓக்கண்டகும்புற, ஊடகு-டிஹேனை, முடிக்குரிய குருபெபிலஹேனை, விதானகே சிஞ்ஞோஅப்பு உரித்துப்பேசும் பஹலவெலபெடிய, முடிக்குரிய வலங்கஓகண்ட; தெற்கு-குளக்கட்டும்அணையும், ஆர். அந்திரிசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பலுவத்தேகும்புற; மேற்கு-பனகலகமனை உன்னுன்சே உரித்துப்பேசும் நாய்முன்னேஹேனையும் நாய்முன்னேஹேனபெடியையும், முடிக்குரிய நாமுன்னேஹேனை.

2,687

## [UNOFFICIAL ANNOUNCEMENTS.]

### தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்கள்.

[A. Kantaiya.]

விளம்பரம்.

யாழ்ப்பாணம் சரசாலை அப்பாக்குட்டி கந்தையாவாகிய நான் 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவின்படி மூன்று மாதங்களின்பின் யாழ்ப்பாண டிஸ்திரிக்கில் பிரசித்த நொத்தாரிசுவாகத் தமிழ்ப்பாஷையில் பணிவிடை நடத்திவர என்னை ஏற்றுக்கொள்ளும்படி அதியுத்தம தேசாதிபதியவர்களிடம் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

அ. கந்தையா.

யாழ்ப்பாணம், சரசாலை,
1906 ம் ஆ புரட்டாதிமீ 15 ந் தேதி.

---

[U. M. Yoosoof.]

அறிவித்தல்.

மட்டக்களப்பைச்சேர்ந்த காத்தான்குடியிருப்பிலே தமிழ்ப்பாஷையில் உறுதி எழுதுவதற்கு நொத்தாரிசுவாகச்சேர்க்கும்படி அதியுத்தம தேசாதிபதியவர்களிடம் இன்று தொடக்கம் மூன்று மாதம் சென்றதன்பின் கேட்க ஆலோசனைசெய்திருக்கிறேனென்பதை இத்தாற் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

உ. முகம்மது யூசுபு.

மட்டக்களப்பு,
1907 ம் ஆ மாசிமீ 26 ந் உ.

---

[D. E. Thomas Jayakoddy.]

கொழும்பு கொட்டாஞ்சேனை ஸிமிட்டரித்தெரு 13 ம் இலக்க வீட்டில் வசிக்கும் டொன் எட்வின் தோமஸ் ஜயக்கொடியாகிய நான் 1877 ம் ஆண்டின் 2 ம் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் கனம்பொருந்திய அரசாட்சி அவர்களிடம் கொழும்பு டிஸ்திரிக்கோட்டில் இங்கிலீஷ் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் தொழில் நடத்தும்பொருட்டு என்னை மூன்று மாதத்துக்குப்பின் ஏற்படுத்தி உட்படுத்தும்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

டி. ஈ. தோமஸ் ஜயக்கொடி.

கொழும்பு,
1907 ம் ஆ தைமீ 9 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.